**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.**

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.**

***2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் வியாழன் கிழமை***

***அசல் வழக்கு எண். 71/2024.ல்***
***வழக்கிடை மனு எண்.139/2025***

திருநாவுக்கரசு பிள்ளை ... மனுதாரர்/முதலெதிர்வாதி

// எதிர் //

1.கே.எஸ்.தர்மவர்த்தினி
2.விஜயகுமாரி
3.உஷாராணி
4.உமாகௌரி ... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனுவானது 04.08.2025ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 06.08.2025ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/முதலெதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இராம.விஸ்வேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் திரு.ஜி.பாலசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு 06.08.2025ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியன பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இந்நீதிமன்றத்தார் அவர்கள் மனுதாரர் பெயரில் 26.02.2025ல் ஏற்பட்ட ஒருநிலை உத்தரவை ரத்து செய்ய கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் வகுமுறை 9 விதி 7ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

## 2. மனுவின் சுருக்கம்

2.1 மனுதாரர் வழக்கில் முதலெதிர்வாதி என்றும் வாதிகள் தங்கள் பெயரில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தான் சென்னையில் தனது மகன் வீட்டில் இருந்து வருவதாகவும, சில காலம்தான் பெண்ணாடத்தில் தங்குவதாகவும், தனக்கு இந்நீதிமன்றத்தின் மூலம் நேரடியாக சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்றும் தனது வீட்டில் ஒட்டு சார்வு செய்யப்பட்டதாக கண்டு தன் பெயரில் 26.02.2025ல் ஒருநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கு விபரம் தினமலர் செய்தி தாளில் வந்த விபரத்தை தனது உறவினர்கள் பெண்ணாடம் கிராமத்திலிருந்து தெரிவித்தார்கள் என்றும் அதன்பிறகு தான் தனது வழக்குரைஞரை சந்தித்து கேட்டபோது, தனது பெயரில் 26.02.2025 அன்று இந்நீதிமன்றத்தில் ஒருநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தனக்கு தெரியவந்தது என்றும் இவ்விதம் ஏற்பட்டது தெய்வாதீனமான ஒன்றாகும் என்றும் தான் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் தனது வழக்குரைஞர் தனது பெயரில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய வேண்டுமென அறிவுறுத்தினார் என்றும் ஆகவே தான் இம்மனுவை தாக்கல் செய்வதாகவும், ஆகவே தனது பேரில் 26.02.2025-ல் பிறப்பிக்கப்பட்ட ஒருநிலை உத்தரவை ரத்து செய்துக்கொண்டு இவ்வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது. இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும்.

2.2 ஆகவே இந்நீதிமன்றத்தார் அருள்கூர்ந்து தன் பெயரில் 26.02.2025-ல் பிறப்பிக்கப்பட்ட ஒருநிலை உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் இருக்கிறது.

**3. எதிருரை சுருக்கம்**

3.1 மனுதாரர் பிராஸ்தாப காலத்தில் உள்ளூரிலேயே தான் இருந்தார் என்றும் இந்நீதிமன்றத்தில் தபால் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணையை நிராகரித்துவிட்டு, தற்போது பொய்யான அம்சங்களை காண்பித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அக்காரணத்திற்காகவே இம்மனு தள்ளுபடிக்கு தகுதியானது. இவ்வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய கட்சி ஏதும் இல்லை என்பதால் இவ்விதம் பொய்யான அம்சங்களை காண்பித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அக்காரணத்திற்காகவே இம்மனு தள்ளுபடிக்கு தகுதியானது.

4. இருதரப்பு வாதங்கள் கேட்டக்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

5.1 மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் அசல் வழக்கிற்காக இந்நீதிமன்றத்தின் மூலம் நேரடியாக சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்றும் தனது வீட்டில் ஒட்டு சார்வு செய்யப்பட்டதாக கண்டு தன் பெயரில் 26.02.2025ல் ஒருநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கு விபரம் தினமலர் செய்தி தாளில் வந்த விபரத்தை தனது உறவினர்கள் பெண்ணாடம் கிராமத்திலிருந்து தெரிவித்தார்கள் என்றும் அதன்பிறகு தான் தனது வழக்குரைஞரை சந்தித்து கேட்டபோது, தனது பெயரில் 26.02.2025 அன்று இந்நீதிமன்றத்தில் ஒருநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தனக்கு தெரியவந்தது என்றும் இவ்விதம் ஏற்பட்டது தெய்வாதீனமான ஒன்றாகும் என்றும் தான் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் தனது வழக்குரைஞர் தனது பெயரில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய வேண்டுமென அறிவுறுத்தினார் என்றும் ஆகவே தான் இம்மனுவை தாக்கல் செய்வதாகவும், ஆகவே தனது பேரில் 26.02.2025-ல் பிறப்பிக்கப்பட்ட ஒருநிலை

உத்தரவை ரத்து செய்துக்கொண்டு இவ்வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது என்றும் வாதிடப்பட்டுள்ளது.

5.2 எதிர்மனுதார்கள் தரப்பு வாதம் என்னவெனில் மனுதாரர் பிராஸ்தாப காலத்தில் உள்ளூரிலேயே தான் இருந்தார் என்றும் இந்நீதிமன்றத்தில் தபால் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணையை நிராகரித்துவிட்டு, தற்போது பொய்யான அம்சங்களை காண்பித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அக்காரணத்திற்காகவே இம்மனு தள்ளுபடிக்கு தகுதியானது. இவ்வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய கட்சி ஏதும் இல்லை என்பதால் இவ்விதம் பொய்யான அம்சங்களை காண்பித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அக்காரணத்திற்காகவே இம்மனு தள்ளுபடிக்கு தகுதியானது என்று வாதிடப்பட்டுள்ளது.

5.3 மேலும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில் 26.02.2025ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்திரவை ரத்து செய்ய கோரிய இம்மனுவினை மனுதாரர் / முதலெதிர்வாதி 04.08.2025ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

6. இந்நிலையில் இருதரப்பினரையும் விசாரித்து சாட்சியம் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் மனுதாரர் / 1ம் எதிர்வாதி தனது வழக்கை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பினை அளிப்பது சட்டம் மற்றும் இயற்கை நீதிக்கோட்பாடுகளின்படி சரியானதாக இருக்கும் என்பதாலும், அதே வேளையில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் மற்றும் நேரம் மற்றும் பொருள் விரயத்தை அதற்குரிய செலவுத்தொகை வழங்கி ஈடுகட்டி அசல் வழக்கின் ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கி வழக்கை மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கின் தீர்வு காண இயலும் என்பதாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## 7. **இறுதி முடிவு**

இம்மனுவின் மனுதாரர் / 1ம் எதிர்வாதியானவர் 26.11.2025 ஆம் தேதிக்குள் செலவுத்தொகையாக ரூ.1000/-ஐ எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு நேரடியாக கொடுக்கவேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடியாகிவிடும் என்ற நிபந்தனையுடனும் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

( **ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.